## 8.33 பணியமைப்பு– பேரூராட்சிகள் துறை–பணியிடைக் காலத்தில் காலஞ் சென்ற பேரூராட்சி பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு அளித்தல்–ஆணை வெளியிடப்படுகிறது .

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (பேரூராட்சி 1) துறை

அரசாணை (நிலை) எண் 206 நாள் : 02.11.1995

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண் 11 ஊ.வ.துறை நாள் 12.1.93
2. பேரூராட்சிகளின் இயக்குநரின் கடித எண் 12686/92/அ2 நாள் 12.7.93
3. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் கடித எண் 5763/இ4/94 நாள் 20.9.94

**ஆணை**

பார்வை ஒன்றில் காணும் அரசு ஆணையில் ஊராட்சி ஒன்றிய பணியாளர்களான பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர் மற்றும் இரவுக் காவலர் ஆகியவர்கள் பணியிடையில் காலமானால் அவர்களின் வாரிசுதாரர்களுக்கு கல்வித் தகுதிக்கு ஏற்ப கருணை அடிபபடையில் வேலை வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதே போன்று பேரூராட்சித் துறையில் அரசு நிலையாக்கப்படாத பதவிகளில் பணியாற்றும் பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர் மற்றும் இரவுக் காவலர் ஆகியோர் பணியிடை காலமானால் அவர்களின் வாரிசுதாரர்களுக்கும் கல்வித் தகுதிக்கு ஏற்ப கருணை அடிப்படையில் வேலை வழங்குவதற்காக பேரூராட்சி இயக்குநரால் அனுப்பப்பட்ட கருத்துரு அரசால் ஆய்வு செய்யப்பட்டது.

2. இது குறித்து தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கலந்தாலோசிக்கப்பட்டது. பேரூராட்சிகளில் பணியாற்றும் பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர் மற்றும் இரவுக் காவலர்கள் அரசு ஊழியர்கள் ஆக்கப்படாமல் உள்ளனர். மேற்படி பணியாளர்கள் பணியிடை இறந்து விட்டால் அவர்களது வாரிசுதாரர்களுக்க இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் போன்ற பதவிகளை கருணையின் அடிப்படையில் வழங்க தேர்வாணையம் தனது இசைவினை பார்வை 3ல் கண்டுள்ள கடிதத்தில் அளித்துள்ளது.

3. மேற்கூறிய சூழ்நிலையில், பேரூராட்சிகளின் இயக்குநரின் கருத்துருவினை அரசு மிகக் கவனத்துடன் பரிசீலித்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

பணியிடை இறந்த பேரூராட்சிப் பணியாளர்களான பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர் மற்றும் இரவுக் காவலர் ஆகியோரின் வாரிசுதாரர்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அதிகார வரம்பிற்குட்பட்ட இளநிலை உதவியாளர், தட்டச்சர் பணியிடங்களுக்கு தகுதி பெற்றவர்களை நியமனம் செய்து தேர்வாணையத்தின் இசைவினைப் பெற்று அவரவர் பணியினை ஆணை வெளியிடப்படும் நாள் முதல் வரன்முறைப்படுத்தலாம்.

4. இவ்வாணை தொழிலாளர் நலம் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறைகளின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகின்றது. அவைகளின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண் முறையே 60355/க்யு1/93–1 நாள் 19.1.94 மற்றும் 6007/94–1 நாள் 17,3,94.

(ஆளுரின் ஆணைப்படி)

**ஐ.தி. ஆச்சார்யலு,**
அரசு செயலர்.